# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | புரட்டாதி 30 வியாழக்கிழமை | 16.10.2025 | கதிர் 341









## இந்தியாவில் ஹரிணி - ஜெய்சங்கர் சந்திப்பு

புதுடில்லி, ஒக். 16

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடனான சந்திப்புடன் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது மூன்று நாள் இந்தியப் பயணத்தை இன்று தொடங்கினார்.

இந்தச் சந்திப்பு குறித்து கருத்துத் தெரிவித்த ஜெய்சங்கர், இன்று காலை புதுடில்லியில் இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தமையில் மகிழ்ச்சி அடைகின்றார் எனக் கூறினார்.

“இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் நமது ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தோம்.” - என்று அவர் எக்ஸ் தளத்தில் ஒரு பதிவில் மேலும் கூறினார்.

7

# எந்தக் கொம்பனும் தப்பவே முடியாது!

## அமைச்சர் சந்திரசேகர் சூளுரை



கொழும்பு, ஒக். 16

“எந்தக் கொம்பனாக இருந்தாலும், உலகில் எந்த மூலையில் பதுங்கி இருந்தாலும் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவு கட்டப்பட்டு வருகின்றது.” - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.


இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படும் என நாம் உறுதியளித்திருந்தோம். இதற்காகப் பொலிஸார் உட்பட பாதுகாப்புத் துறையினருக்குத் தேவையான வளங்களை வழங்கினோம். அவர்கள் சிறப்பாக தமது கடமைகளைச் செயற்படுத்தி வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல் மன்னர்கள் சிக்கி, சிறைக்குச் சென்றுள்ளனர். நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற நபர்கள்கூட நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் இப்படியான கைதுகள் நடத்தப்படவில்லை.

7

## செவ்வந்தி குழு பொலிஸ் தடுப்புக் காவலில்




கொழும்பு, ஒக். 16

நேபாளத்தில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவை 72 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கணேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுக்கொலை

7

## சர்வதேச விசாரணையை பொன்சேகா கோர வேண்டும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் நடந்த விடயங்கள் தொடர்பில் உண்மையாகவே சாட்சியம் வழங்குவார் என்றால் சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும்என்பதைஅவர்வலியுறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

7

## கேடு கெட்ட அரசியலை நிறுத்தாவிட்டால் உங்கள் முகத்திரைகள் கிழித்தெறியப்படும்

### மனோ, ஜீவன், திகா, இராதாவுக்கு சந்திரசேகர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 16

“நாடாளுமன்ற உறுப்பினரானான ஜீவன் தொண்டமான், மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வேலுசாமி

7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய!

கொழும்பு, ஒக் .16

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஹேவுஏ மற்றும் சிந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஏற்பாடு செய்யும் **NDTV** உலகஉச்சிமாநாடுநாளையதினம்(ஒக்டோபர் 17 ஆம் திகதி) நடைபெறவுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் "நிச்சயமற்ற காலங்களில் ஏற்படும் மாற்றங்களை வழிநடத்துதல்" என்ற தலைப்பில் பிரதமர் சிறப்புரையாற்றவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது

இதன்பொருட்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரி இன்று (16) அதிகாலை சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான **UL** 191 என்ற விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

பிரதமர் இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதிவரை இந்தியாவில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத்தின் போது பிரதமர் ஹரிணி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனும் உயர் மட்ட பிரதிநிதிகளுடனும் சில கலந்துரையாடல்களில்ஈடுபடவுள்ளார்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட இஷாரா செவ்வந்தி!

கொழும்பு, ஒக் .16

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உடந்தையாக இருந்த இஷாரா செவ்வந்தி உட்பட ஐந்து பேர் நேபாளத்தில், கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதான சந்தேகநபர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான ருடு 182 ரக விமானத்தின் ஊடாக காத்மண்டுவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று மாலை அழைத்துவரப்பட்டனர்.

இஷாரா செவ்வந்தி வீரசிங்க பின்புர தேவகே (26), கிளிநொச்சி–பளையை சேர்ந்த ஜீவதாசன் கனகராசா–சுரேஸ்(33), யாழ்மிருசுவிலை சேர்ந்த தக்ஷி நந்தகுமார் (23), தினேஷ் ஷ்யாமந்த டி சில்வா (49), யாழ்ப்பாணத்தை சேர்ந்த கெனடி பஸ்தியாம்பிள்ளை– ஜே.கே.பாய் (35) மற்றும் தினேஷ் நிசாந்த குமார விக்ரம ஆராச்சிகே (43) ஆகியோரே கைது செய்யப்பட்டு நேற்று விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

குறித்த ஆறு சந்தேகநபர்களும்திட்டமிடப்பட்ட குற்றச்செயலுடன்தொடர்புடையகெஹல்பத்தர பத்மேவின் குழுவை சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் மலேசியா மற்றும் துபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டதாகவும் நேபாள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட இஷாரா செவ்வந்தி கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இஷாரா செவ்வந்தி தப்பிக்க உதவிய ஜே.கே. பாய் பற்றியும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவத்துக்கு பின்னர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கெனடி பஸ்தியாம்பிள்ளை (ஜே.கே. பாய்), இஷாரா செவ்வந்தியை படகில் இந்தியாவுக்கு அழைத்துச் சென்று, கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் அங்கேயே வைத்திருந்து பின்னர் ஆறு நாள் ரயில் பயணத்தின் மூலம் நேபாளத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

கடல் வழியாக குற்றவாளிகளை மற்ற நாடுகளுக்கு கடத்துவதை தனது தொழிலாகக் கொண்ட ஜே.கே. பாய், தனது தொடர்புகளைப் பயன்படுத்தி எல்லை தாண்டி நேபாளத்திற்கு கொண்டு வந்து காத்மாண்டுவில் ஒரு வாடகை வீட்டையும் அவருக்கு வழங்கியுள்ளார் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மற்றொரு பெண் சாவகச்சேரியைச்சேர்ந்த தக்ஷிஎன அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மேலும் அவர் இஷாரா செவ்வந்தியை மிகவும் ஒத்த தோற்றமுடையவர் என்றும் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் தரவு மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தி இஷாரா செவ்வந்தியின் பெயரில் ஒரு போலி கடவுசீட்டு தயாரிக்கப்பட்டு, அதன் மூலம் செவ்வந்தியை ஐரோப்பாவிற்கு அனுப்ப திட்டம் தீட்டப்பட்டது தெரியவந்துள்ளது.

கெஹல்பத்தர பத்மேவின் ஆலோசனையின் பேரில், ஜே.கே. பாய் இந்தத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளதுடன் ஆனால், பத்மே மற்றும்அவரது கும்பல்கைது செய்யப்பட்டபோது அந்தத் திட்டங்கள் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# பயணச் சீட்டுக்களை வழங்காத நடத்துனர்களுக்கு கடும் நடவடிக்கை!

கொழும்பு, ஒக் .16

மேல் மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில் பயணச் சீட்டுக்களை வழங்காத நடத்துனர்கள் மற்றும் பயணச்சீட்டு இன்றி பயணிக்கும் பயணிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என கடந்த முதலாம் திகதி முதல் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களாக பயணிகள் மற்றும் பேருந்து நடத்துனர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எனினும் பயணச் சீட்டுக்களை பயணிகளுக்கு வழங்குவது தொடர்பில் நேற்று (16) மாத்திரம் நடாத்தப்பட்ட சோதனையின் அடிப்படையில் பயணச் சீட்டு இன்றி பயணித்த 5 பயணிகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டதாக மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் 217 பேருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், பயணச்சீட்டுக்களை வழங்காத 18 நடத்துனர்களுக்கும், பயணச் சீட்டு இன்றி பயணித்த 5 பயணிகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று முதல் குறித்த சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்பதுடன் எதிர்வரும் நாட்களில் சுற்றிவளைப்புகள் இடம்பெறும் எனவும் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படும் எனவும் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் காமினி ஜாசிங்க கருத்து தெரிவிக்கையில்,

பயணிகள் தங்களுக்கு வழங்கப்படும் பேருந்து பயணச் சீட்டுக்களை பயணிக்கும் போது தம்வசம் வைத்திருக்காவிட்டால் 100 ரூபாய் அபராதமாக விதிக்கப்படும்.

அத்துடன் பயணக் கட்டணத்தை இரு மடங்காக செலுத்தவும் வேண்டும். பயணக் கட்டணம் என்பது அந்த பேருந்து பயணத்தை ஆரம்பித்து பயணத்தை நிறைவு செய்யும் தூரத்திற்குரிய கட்டணமாகும்.

அதனை விடுத்து பயணிகள் ஏறிய இடத்தில் இருந்து செல்லும் தூரம் இல்லை என்பதை மறந்து விட வேண்டாம்.

அதேநேரம் நீங்கள் கேட்டும் நடத்துனர் உங்களுக்கான பயணச் சீட்டை வழங்கவில்லையாயின் 070 - 2860860 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு காமினி ஜாசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பான சுற்றிவளைப்புகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரசாந்தவின் இடமாற்றம் தொடர்பில் வெளியான காரணம்!

கொழும்பு, ஒக் .16

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரசாந்த இடமாற்றம் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் பொலிஸ் தலைமையக வட்டாரத்தில் இருந்து சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரசாந்தவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை நிமித்தமாகவே அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் தெரிவிப்பவர்களுக்கு வழங்க வேண்டிய 5 மில்லியன் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியமை, நிர்வாக பலவீனங்கள் மற்றும் மூன்று மாதங்களுக்குள் போதைப்பொருள் சோதனைகளை முறையாக நடத்தத் தவறியமை உள்ளிட்ட குற்றசாட்டுகள் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

5 மில்லியன் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே விசாரணைகளை தொடங்கியுள்ளது.

அதன்படி, அவரை இடமாற்றம் செய்ய செப்டம்பர் 25ஆம் திகதி பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்று (15) அதனுடன் தொடர்புடைய உத்தரவு கிடைத்த நிலையில், அவர் இடமாற்றம் செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையக வட்டார தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவின் இடமாற்றம் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியாகிய தகவல்கள் முற்றிலும் தவறானவை என பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை – யாரும் தப்ப முடியாது!

கொழும்பு, ஒக் .16

எந்த கொம்பனாக இருந்தாலும், உலகில் எந்த மூலையில் பதுங்கி இருந்தாலும் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவு கட்டப்பட்டுவருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

“பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படும் என நாம் உறுதியளித்திருந்தோம். இதற்காக பொலிஸார் உட்பட பாதுகாப்பு துறையினருக்கு தேவையான வளங்களை வழங்கினோம். அவர்கள் சிறப்பாக தமது கடமைகளை செயல்படுத்தி வருகின்றனர்.

போதைப் பொருள் கடத்தல் மன்னர்கள் சிக்கி, சிறைக்கு சென்றுள்ளனர். நீதிமன்றத்தக்குள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற நபர்கள்கூட நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் இப்படியான கைதுகள் நடத்தப்படவில்லை.

நாட்டில் கடந்த காலங்களில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றபோது, இவற்றை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும், செவ்வந்தி உள்ளிட்டவர்களை பிடிப்பதற்குகூட தெம்பு இல்லை எனவும் எதிரணிகள் கூச்சலிட்டன. ஆனால் எந்த கொம்பனாக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்பது இன்று நிரூபனமாகி வருகின்றது.

கடந்தகாலங்களில்தான் குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர். ஆனால் எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை. தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்ப முடியாது.

அதேவேளை, மக்களுடைய சொத்துகளை களவாடியவர்கள், சூறையடித்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் சிக்குவார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன் மகேந்திரன் விடயத்திலும் சட்டம் செயல்படும்.” என்றார் அமைச்சர் இரா. சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (ஐ)



## ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்த புதிய குழுவை நியமித்த ஐ.தே.க

*கொழும்பு, ஒக் .16*

*ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த மூன்று பேர் கொண்ட குழுவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.*

*விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஐக்கிய தேசிய கட்சி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.*

*இந்தக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, ஜனாதிபதி சட்டத்தரணி ரெனோல்ட் பெரேரா ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.*

*இலங்கையின்பல கட்சி முறையிலான ஜனநாயகத்தை பாதுகாக்க அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.*

*(ஐ)*

## சுங்கம் தடுத்துள்ள வாகனங்களை விடுவிப்பது குறித்த அறிவிப்பு

கொழும்பு, ஒக் .16



நாட்டில் நாணயக் கடிதங்களை திறந்து உற்பத்தி செய்யப்பட்ட நாடு அல்லாத வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதால், இலங்கை சுங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுவிக்க முடியும் என்று இலங்கை சுங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சுங்கம் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

இலங்கை சுங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவிக்க உத்தரவிடக் கோரி வாகன இறக்குமதியாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட சுமார் 15 அடிப்படை உரிமை மனுக்கள் இன்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அமர்வு முன் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது இலங்கை சுங்கம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, இந்த வழக்குகளுக்கு உட்பட்ட, இலங்கை சுங்கத்தால் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை, நிறுவனத்தின் உத்தரவாதம் அல்லது தனிப்பட்ட உத்தரவாதத்தை சமர்ப்பித்த பிறகு இறக்குமதியாளர்களால் விடுவிக்க முடியும் என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய மேலதிக கட்டணங்களை செலுத்திய பிறகு தொடர்புடைய வாகனங்களை பதிவு செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, இதே போன்று இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் கடந்த காலங்களில் இலங்கை சுங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கம் எவ்வாறு இதுபோன்று செயல்படுகிறது என்றும் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறு விடுவிக்கப்பட்ட வாகனங்களின் பட்டியலை நீதிமன்றத்திற்கு அறியப்படுத்துவதற்கான கட்டளை பிறப்பிக்குமாறும் அவர் நீதிமன்றத்தை வலியுறுத்தினார்.

மனுதாரர்கள் இந்த வழக்கில் வெற்றி பெற்றால், இறக்குமதியாளர்கள் இந்த வாகனங்களை மீட்டெடுக்கும்போது செலுத்த வேண்டிய 35 சதவீத மேலதிக கட்டணத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா சுட்டிக்காட்டினார்.

அதன்படி, குறித்து மனுக்கள் தொடர்பாக தீர்மானிப்பதற்காக எதிர்வரும் 22 ஆம் திகதி வழக்கை மீண்டும் அழைப்பதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது. (ஐ)

# கரூர் கூட்ட நெரிசலுக்கு விஜய் 7 மணி நேரம் தாமதமாக வந்ததே காரணம்: பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

கரூர் கூட்டத்துக்கு வந்தவர்களுக்கு காலை முதல் குடிநீர், உணவு வழங்கப்படவில்லை, இயற்கை உபாதைகளை கழிக்க பெண்களால் வெளியில் செல்ல முடியவில்லை. நடிகர் விஜய் 7 மணி நேரம் தாமதமாக வந்ததே கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணமாக அமைந்ததுடன், 41 பேர் இறப்புக்கும் காரணமாகிவிட்டது என்று தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டினார். தமிழக சட்டப்பேரவையில் நேற்று கரூர், வேலுச்சாமிபுரத்தில் நடந்த துயர சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசியதாவது:



கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்த துயரச் சம்பவம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனதையும் உலுக்கியது. நம் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்கும், சோகத்திற்கும் உள்ளாக்கியது. இறந்து போனவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியை நான் செலுத்துகிறேன். உறவுகளை இழந்தவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். 26.9.2025 அன்று, அக்கட்சியின் மேற்கு மாவட்ட செயலாளர் வேலுச்சாமிபுரத்தில் 27.9.2025 அன்று மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்த அனுமதி கோரினார். அவர் கொடுத்த மனு ஏற்கப்பட்டு, 11 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது.

கரூர்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அரசின்காவல்துறை சார்பாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மொத்தம் 606 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காவல் துறையை பொறுத்தவரை, வழக்கமாக அரசியல் பரப்புரை கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு காவலர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது. பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அதைவிட அதிகமாக கூட்டம் வரும் என்று எதிர்பார்த்து கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கூட்டம் நடத்த அனுமதி கோரி கொடுத்த கடிதத்தில் மாலை 3 முதல் இரவு 10 மணி வரை என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சி தலைவர் கரூர் வருவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்திருந்தார். இதனால் கரூரில் காலை முதலே மக்கள் வரத் தொடங்கி விட்டனர். 27.9.2025 அன்று, அக்கட்சியின் தலைவர் சென்னையில் இருந்து, காலை 8.40 மணிக்கு புறப்பட்டு, 9.25 மணிக்கு திருச்சி வந்தடைந்தார். அதன் பின்னர் நாமக்கல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிறகு, கரூருக்கு இரவு 7 மணிக்கு வந்துள்ளார். அதாவது அறிவிக்கப்பட்ட 12 மணியை கடந்து, 7 மணி நேரம் கழித்துத்தான் வந்தார். இந்த காலதாமதம் கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணமாக அமைந்தது. காலை முதல் காத்திருந்த மக்களுக்கு போதிய குடிநீர் வழங்கவில்லை உணவு வழங்க எந்தவிதமான ஏற்பாடுகளும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களால் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளை கழிக்க பெண்களால் வெளியில் செல்ல முடியவில்லை.

நிகழ்ச்சி நடைபெறும் பகுதியில் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், பிரசார வாகனத்தின் பின்னால் ஏராளமானோர் வந்ததாலும், கரூர் நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர், பிரசார வாகனத்தில் இருந்த ஏற்பாட்டாளர்களை அக்க்ஷயா மருத்துவமனை அருகே நிறுத்தி கூட்டத்தில் உரையாற்றுமாறு அறிவுறுத்தினர். அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், முன்பே அனுமதிக்கப்பட்ட இடத்தில்தான் பேசுவோம் என்று பிடிவாதமாக தொடர்ந்து முன்னேறி சென்றனர்.

வழிமுறைகளை மீறி, வாகனம் அக்க்ஷயா மருத்துவமனையில் இருந்து, 30-35 மீட்டர் தூரம் சென்றபோது இருபுறமும் இருந்த கூட்டத்தினரை இது நிலைகுலையச் செய்தது. இதனால் கூட்டத்தில் பல இடங்களில் அலைமோதல் ஏற்பட்டிருக்கிறது. கூட்டத்தில் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் பீதி, மூச்சுத் திணறல், மயக்கம் மற்றும் நெரிசல் ஏற்பட்டது. பலரும் கீழே விழுந்து மிதிபட்டிருக்கிறார்கள். கூட்டத்தின் ஒரு பகுதியினர் ஜெனரேட்டர் பகுதிக்குள் நுழைந்து, தகரக் கொட்டகையை அகற்றியும் வெளியேற முயற்சி செய்திருக்கிறார்கள்.

இதனால் மின்சாரம் தாக்குவதை தடுக்க, ஜெனரேட்டர் ஆபரேட்டர் மின்சாரத்தை துண்டித்திருக்கிறார். நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் கூட்ட நெரிசலால் காயமடைந்தும், சோர்வினால் மயக்கமடைந்தும் மக்கள் உதவி கோருவதை கவனித்து, காவல் துறையினர் மருத்துவமனை ஆம்புலன்சுக்கு தகவல் அனுப்பி வரவழைத்திருக்கிறார்கள். இவ்வாறு கூட்ட நெரிசல் ஏற்பட்டபோது அவர்களை காப்பாற்றத்தான் ஆம்புலன்ஸ் வந்ததே தவிர, நெரிசல் ஏற்படுவதற்கு முன்பு எந்த ஆம்புலன்சும் வரவில்லை.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினர் மற்றும் ஆம்புலன்ஸ் மீட்புக் குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு, அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர். மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தவெக கட்சியினர், இரண்டு ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களை தாக்கி, ஆம்புலன்ஸ் வாகனத்தை சேதப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் மீட்புப் பணிகள் தடைபட்டன. இது தொடர்பாக, கரூர் நகர காவல் நிலையத்தில், இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

சம்பந்தப்பட்ட நபர் கரூர் நீதித்துறை நடுவர் முன்பு சரணடைந்திருக்கிறார். மற்றொரு குற்றவாளி, இரண்டு வழக்குகளிலும் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டிருக்கிறார். கரூரில் தமிழக வெற்றிக் கழக கட்சியின் பரப்புரை கூட்டத்தில், நெரிசல் ஏற்பட்டு மக்கள் இறப்பு ஏற்பட்டுள்ளது என்ற தகவல் அறிந்த உடனேயே தமிழ்நாடு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், முதன்மை செயலர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் உள்ளிட்டோர் உடனடியாக கரூருக்கு அனுப்பப்பட்டார்கள்.

மேலும், அன்றிரவே நானும் கரூருக்கு சென்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறினேன். கரூர் துயரத்தைக் கேள்விப்பட்டதும் என்னால் வீட்டில் இருக்க முடியவில்லை. அதனால்தான் உடனடியாக கரூருக்கு அன்றைய இரவே சென்றேன். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களை நேரில் பார்வையிட்டு, மருத்துவர்களுடன் ஆலோசித்து உத்தரவுகள் பிறப்பித்தேன். அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டன. அமைச்சர்கள் பலரும் அங்கு சென்று பணியாற்றினார்கள்.

துயரமான இந்த சம்பவத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கும் தலா ரூ.10 லட்சம் வழங்கப்பட்டது. தீவிர காயமடைந்த 47 பேருக்கு தலா ரூ.1 லட்சம், வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்ற 55 பேருக்கு தலா ரூ.50,000 என மொத்தம் 143 பேருக்கு ரூ.4.84 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்டது. இந்த சம்பவத்தை விசாரிக்க, 28.9.2025 அன்று ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, 3.10.2025 அன்று ஐ.ஜி., அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் இவ்வழக்கு சிபிஐ விசாரணைக்காக ஒப்படைக்கப்பட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அரசின் உயர் அலுவலர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் செய்தியாளர்களை சந்தித்து உண்மையை நிலையை வீடியோக்களுடன் ஆதாரத்தோடு தெளிவுபடுத்தினார்கள்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவரையும் காத்தது நமது அரசு. அனைவருக்கும் உரிய சிகிச்சை அளித்தது நமது அரசு. உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இறுதி தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்பதை நான் இங்கே உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இதுபோன்ற துயர சம்பவம் இனி நடக்கக்கூடாது என்ற உறுதியை அனைத்து அரசியல் இயக்கங்களும், பொது அமைப்புகளும் எடுக்க வேண்டும். அனைத்தையும்விட மக்களின் உயிரே முக்கியம், மக்களின் உயிரே விலைமதிப்பற்றது. இதை மனதில் வைத்து செயல்பட வேண்டும். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சம்பவம் நடந்த அதே வேலுச்சாமிபுரத்தில் இதற்கு இரு தினங்களுக்கு முன்பாக, அதாவது 25.9.2025 அன்று எதிர்க்கட்சி தலைவர் (எடப்பாடி பழனிசாமி) கலந்துகொண்ட பரப்புரை நிகழ்ச்சி நடந்துள்ளது. அந்த கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டனர்.

எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் அக்கூட்டம் நடந்து முடிந்தது. அதில் சுமார் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் பங்கேற்றனர். அந்த பரப்புரை கூட்டத்திற்கு சுமார் 137 காவலர்களும், 30 ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், அதற்கு நேர்மாறாக இந்த கட்சியின் நிகழ்ச்சி நடந்துள்ளது என்று முதல்வர் கூறினார்.

உடனடியாக, உடற்கூராய்வு நடைமுறையை முடித்து பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டி கரூர் அரசு மருத்துவ கல்லூரி தடயவியல் துறை தலைவர் சங்கர் தலைமையில் 24 மருத்துவர்கள் மற்றும் 16 உதவி பணியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு உடற்கூராய்வு செய்யப்பட்டது. 28.9.2025 அன்று அதிகாலை 1.45 மணிக்கு, முதல் உடற்கூராய்வு தொடங்கப்பட்டு, அன்று மதியம் 4 மணியளவில் 39வது உடற்கூராய்வு முடிவுற்றது என்று முதல்வர் கூறினர். (ஐ)

## நாளை செல்வதாக இருந்த நடிகர் விஜயின் கரூர் பயணம் திடீர் ரத்து: இறந்தவர்களின் குடும்பத்தினர் ஏமாற்றம்

கரூருக்கு நாளை செல்வதாக இருந்த நடிகர் விஜயின் பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் இறந்தவர்களின் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி பிரசாரத்துக்கு சென்ற விஜயை பார்க்க ரசிகர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் முண்டியடித்துச் சென்றனர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் பலியாகினர். 180க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். சம்பவம் நடந்தவுடன் நடிகர் விஜய் மற்றும் அவரது கட்சி நிர்வாகிகள் உடனடியாக காரில் திருச்சி சென்றனர்.

பின்னர் அங்கிருந்து சென்னைக்கு திரும்பி விட்டனர். ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் முகாமிட்டு காயமடைந்தவர்களுக்கான சிகிச்சையை தீவிரப்படுத்தினர். இதனால் பலர் காப்பாற்றப்பட்டனர். ஆனால் கரூர் சம்பவத்திற்குப் பிறகு தவெக வினர் ஒருவர் கூட மருத்துவமனைக்கு செல்லவில்லை. இதனால் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் கடும் அதிருப்தியும், அதிர்ச்சியும் அடைந்தனர்.

இந்தநிலையில் சம்பவம் நடந்து 20 நாட்களுக்குப் பிறகு கரூர் சென்று பாதிக்கப்பட்ட மக்களையும், இறந்தவர்களின் குடும்பத்தினரையும் சந்தித்து ஆறுதல் கூறவும், அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் விஜய் முடிவு செய்தார். மேலும் இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.20 லட்சம் வழங்கப்படும் என்று விஜய் அறிவித்தார். இந்தப் பணத்தை குடும்பத்தினருக்கு வழங்கவும் முடிவு செய்தார். இதற்காக கரூருக்கு நாளை செல்வதாக திட்டமிட்டார்.

அங்கு 2 மண்டபத்தையும் பார்த்து நிகழ்ச்சி நடத்த தவெகவினர் முடிவு செய்திருந்தனர். ஆனால் இந்த கூட்டத்துக்கு இதுவரை போலீசாரிடம் அவர்கள் அனுமதி வாங்கவில்லை. இதனால் கூட்டம் ரத்து செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் விரைவில் அவர் கரூர் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதா? அவர்களை சென்னைக்கு அழைத்து வந்து பனையூரில் உள்ள தனது அலுவலகத்தில் வைத்து நிவாரண உதவிகள் வழங்குவதா என்று விஜய் ஆலோசனை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே சென்னையில் மழையால் பாதிக்கப்பட்டவர்களையும், துப்புறவு பணியாளர்களையும் தனது வீட்டுக்கு அழைத்து வந்துதான் பார்த்தார். அதேபோல கரூரில் பாதிக்கப்பட்ட மக்களையும் சென்னைக்கு அழைத்து வந்து நிவாரண உதவிகள் வழங்க அவர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இது குறித்து தவெக தரப்பில் இருந்து உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால் கரூருக்கு நாளை செல்வதாக இருந்த திட்டம் மட்டும் ரத்து செய்யப்பட்டதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஐ)



# நம்பிக்கையில்லா நம்பிக்கைகள்





தன் வாழ்க்கையை தொடங்குகின்றன. இது அதனதனின் நம்பிக்கை, என்றாலும் இயற்கையின் நோக்கம் அதற்க்கு வேறு விதமாய் இருக்கும் போது இது நம்பிக்கையில்லா நம்பிக்கைதானே.

சரி மனிதர்களின் சமூக வாழ்க்கைக்கு வருவோம், ஜோசியத்தை நம்புபவர்கள், நம்பாதவர்கள் இரு பிரிவு என்றாலும் ஜோசியத்தை நம்பமாட்டேன் என்று பொது வெளியில் சொல்லி அதனடிப்படையிலேயே எல்லா காரியங்களையும் செய்பவர்கள். இவர்களை என்னவென்று சொல்லலாம்?

உலகத்தின் இயக்கங்களே நம்பிக்கையின் அடிப்படையில் நகர்ந்து கொண்டிருந்தாலும் அந்த நம்பிக்கை எப்பொழுதும் நம்பிக்கையில்லா நம்பிக்கையாகவே இருக்கும் வாய்ப்பு உண்டு.

இதை விபத்து, மரணம் என்று மட்டுமே கணக்கில் கொள்ளவேண்டிய அவசியமில்லை. சின்ன சின்ன விசயங்களும் கூட இதனடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு தேர்வில் எண்பது மதிப்பெண் வாங்கியவன் சொல்வது தொன்னூறு வரும் என்று நினைத்தேன்என்றால்அவனது நம்பிக்கை சற்று குறைந்து போனது எனலாம். அவனே எப்படியும் பாஸ் மார்க் வந்துடும்னு நினைச்சேன், ஆனா இவ்வளவு வருமுன்னு நினைக்கலை இது அவனது நம்பிக்கை தான் தேர்வு பெறுவிடுவோம் என்று அதே நேரம் எதிர்பாராமல் நல்ல மதிப்பெண் கிடைத்துவிட்டது, இது நம்பிக்கை தந்த ஊக்கம் என்று கொள்ளலாம். மற்றொருவன் நான் 'பாஸாவானேனான்னு, பெயிலாவேனான்னு தெரியாது, 'பாஸ்' அப்படீன்னா கட்டாயம் நல்ல மார்க்குலதான் பாஸ் பண்ணியிருப்பேன். பெயிலாயிருந்தா ஒரு மார்க்குல இரண்டு மார்க்குல போயிருக்கும், இது அவனது நம்பிக்கையில்லா நம்பிக்கை. இதை அவன் நினைப்பானா? என்னும் கேள்விக்கு செல்ல வேண்டியது இல்லை, காரணம்நம்பிக்கையில்லா நம்பிக்கை என்பதற்கான உதாரணம் மட்டுமே.

இப்படி பார்க்கலாம், 'கோள்கள்' அனைத்துமே அந்தரத்தில் சுழன்று கொண்டிருக்கின்றன என்பது அறிவியல் பூர்வமாக நமக்கு தெரிந்திருக்கும் தகவல். நாம் வாழும் பூமி உட்பட. ஆனால் அனைத்தும் எந்த விதமான பிடிப்பும் இல்லாமல் எப்படி தானும் சுற்றி சூரியனையும் சுற்றுகின்றன? அதற்கு அடிப்படை காரணம் ஈர்ப்பு விசை (காந்த விசை) அதனால் அவைகள் நேர்கோட்டில் சுற்றி வருகின்றன என்பது போன்ற அறிவியல் உண்மைகளை நமக்கு எடுத்து காட்டினாலும் நம் மனதுக்குள் இன்னுமே அதனை பற்றிய ஐயங்கள் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதே நேரத்தில் அப்படி சுற்றுவதால்தான் இரவும், பகலும் வருகிறது, கால சூழ்நிலைகள் மாறுகிறது போன்ற பல சூழ்நிலைகளைகளை நம்புகிறோம்.

அப்படி எல்லாம் இல்லை என்று வாதாடுபவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சில உதாரணங்கள், உலகத்தை கடவுள்தான் படைத்துள்ளார் என்று நம்புகிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?. அந்தந்த இடங்களுக்கு (நாடுகளுக்கு) தகுந்தவாறு அந்த நாட்டு கடவுள்தான் இந்த உலகத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று நம்பும் மக்கள் எத்தனை பேர்?

மற்றபடி இந்த கட்டுரை மனித முன்னேற்ற சிந்தனைகளை குறைப்பதற்காக சொல்லப்பட்டவை அல்ல. உன்னால் முடியும் என்று தீர்க்கமாக நம்புகிறவர்கள், அதே நேரத்தில் அதைத்தான் நம்பி இருக்கிறேன் என்னும் எண்ணத்தை வளர்க்கவேண்டாம் என்பதே இதன் உண்மை.

சே..நான் எவ்வளவு நம்பினேன், இது போன்ற கழிவிரக்கமான பேச்சுக்களை கேட்டிருக்கிறோம்அல்லவா? அந்த நம்பிக்கை வைக்கும்போதே மனதுக்குள் ஒரு ஓரமாய் எதிர்மறை சிந்தனையையும் கொண்டு வந்து நம்பிக்கை பொய்த்து போனால் மாற்று உடனடியாக மேற்கொள்ளப் படவேண்டும் என்னும் எண்ணத்தை வளர்த்து கொள்ளலாம் அல்லவா?

இதை இப்படி பாருங்கள் தங்களுக்கு பிறந்த மக்களை எப்படியாவது நல்லபடியாக உருவாக்கிவிடவேண்டும் என்று தாங்கள் உழைத்து சம்பாதித்ததை எல்லாம் செலவு செய்து அவர்களை உருவாக்குகிறார்கள். உருவான மக்கள் தங்களை உருவாக்கியவர்களை கவனிப்பார்கள் என்பது எந்த நம்பிக்கையின் அடிப்படையில்?

தங்களுடைய மக்களை(வாரிசுகளை) நம்பி எதிர்காலத்தில் இருக்க கூடாது, அவர்களை உருவாக்கி விடுவதும், எதிர்காலத்தில் நம்மை பாதுகாத்து கொள்ள ஏற்பாடுகளை செய்து கொள்வதும், நல்லது என்று அந்த தம்பதிகள் மேற்கொள்ளும் உத்தியை “நம்பிக்கையில்லா நம்பிக்கைகள்” என்று சொல்லலாமா?

இயற்கை நமக்கு உணர்த்தும் பாடமும் அதுதான். நம்பிக்கை வையுங்கள், அதே நேரத்தில் அந்த நம்பிக்கையின் மீது நம்பிக்கை யில்லாமலும் (மாற்று யோசனை) இருக்க வேண்டும் என்னும் பாடத்தை ஒவ்வொரு சூழலிலும் கற்று கொடுத்து கொண்டேதான் இருக்கிறது.



# எல்லையில் இருநாடுகளும் பயங்கர மோதல் பாக்.-ஆப்கன் குண்டுமழை 40 தலிபான்கள் உயிரிழப்பு: 48 மணி நேர போர் நிறுத்த ஒப்பந்தம்



பாகிஸ்தானும், ஆப்கனும் 2,600 கிலோமீட்டர் எல்லையைப் பகிர்ந்துள்ளன. ஆப்கனில் தலிபான்கள் ஆட்சி வந்த பிறகு பாகிஸ்தான் எல்லையில் அடிக்கடி தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த தாக்குதலில் ஈடுபட்டு வரும் தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் குழுவை சேர்ந்த உறுப்பினர்களுக்கு தலிபான் அடைக்கலம் கொடுப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகிறது. கடந்த 2021ஆம் ஆண்டு முதல் மோதல் அதிகரித்து வருவதால் பாக்.கில் உள்ள ஆப்கன் மக்களை வெளியேற்ற பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டது. இதன்பிறகு பாக். எல்லையில் தெஹ்ரீக் இ தலிபான் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால் ஏராளமான பாக். வீரர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

கடந்த வாரம் எல்லை தாண்டி காபூல் மீது பாக். ராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது. இதையடுத்து கடந்த சனிக்கிழமை பாக். எல்லையில் ராணுவ முகாம்களை குறிவைத்து தலிபான்கள் தாக்குதல் நடத்தினார்கள். அதில் 58 பாக். வீரர்கள் கொல்லப்பட்டனர். இதை தொடர்ந்து இருதரப்பிலும் நடந்த மோதலில் 200 தலிபான்கள் கொல்லப்பட்டதாகவும், அந்த மோதலில் 28 பாக்.ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. நேற்றும் இருதரப்பிலும் மோதல் வெடித்தது. ஆக்கிரமிப்பு காஷ்மீர் பலுசிஸ்தான் மாகணத்தின் ஸ்பின் போல்டாக் பகுதியில் நான்கு இடங்களில் தலிபான்கள் தாக்குதல் நடத்தினார்கள். இந்த தாக்குதல்களை பாகிஸ்தான் ராணுவம் வெற்றிகரமாக முறியடித்ததாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் சுமார் 40 தலிபான்கள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது. காந்தஹார் மாகாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் தலிபான் படைகளின் 4வது பட்டாலியன் மற்றும் 6வது எல்லைப் படை பிரிவு முற்றிலுமாக அழிக்கப்பட்டன. அதே சமயம் பாகிஸ்தானில் 10 டாங்கிகள் தகர்க்கப்பட்டன. ஏராளமான பாக். வீரர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. இதனால் எல்லையில் பெரும் பதற்றம் உருவானது. பதற்றத்தை தணிக்க பாக், ஆப்கன் நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு நேற்று மாலை 6 மணி முதல் அடுத்த 48 மணி நேரத்திற்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஹமாஸ் ஒப்படைத்த ஒரு உடல் பிணை கைதியின் உடல் அல்ல: இஸ்ரேல் ராணுவம் தகவல்



இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததை அடுத்து ஹமாஸ் பிடியில் உள்ள உயிருள்ள 20 இஸ்ரேலிய பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் 4 பிணை கைதிகளின் உடல்களை ஹமாஸ் ஒப்படைத்தது. இதில் ஒரு உடல் பிணை கைதியின் உடல் அல்ல என்று இஸ்ரேல் கூறியுள்ளது. இதனால் அமைதி ஒப்பந்தம் செயல்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது. இதுபற்றி இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறுகையில்,"கடைசி பிணை கைதியின் உடல் வரும் வரையில் முயற்சிகளை நிறுத்த மாட்டோம்" என்று தெரிவித்துள்ளார். ஹமாஸ் படையின் செய்தி தொடர்பாளர் ஹசேம் காசம், அமைதி ஒப்பந்தத்தின்படி உடல்களை ஒப்படைப்பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், கிழக்கு காசாவில் இஸ்ரேல் துப்பாக்கிசூடு நடத்தி அமைதி ஒப்பந்த விதிகளை மீறி வருகிறது என தெரிவித்தார். உடல்களை ஒப்படைக்காவிட்டால் காசாவுக்கு வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்படும் என்று இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது. (ஐ)

## உலகத் தலைவர்கள் மத்தியில் கலகலப்பு

## புகைப்பழக்கத்தை கைவிட்டால் கொலை செய்யவும் தயங்க மாட்டேன்: இத்தாலி பிரதமர் மெலோனி பரபரப்பு பேச்சு



சிகரெட்டை விட்டால் ஒருவேளை நான் யாரையாவது கொலை செய்து விடுவேன் என இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி வேடிக்கையாகக் கூறியது உலக அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது. எகிப்தில் நடைபெற்ற காசா உச்சி மாநாட்டின் போது உலகத் தலைவர்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது, துருக்கியை புகைப்பிடிக்காத நாடாக மாற்ற உறுதியேற்றுள்ள அந்நாட்டு அதிபர் எர்டோகன், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியின் புகைப்பிடிக்கும் பழக்கம் குறித்து கேள்வி எழுப்பினார். இதுகுறித்து அவர் மெலோனியிடம், 'நீங்கள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறீர்கள்.


ஆனால், நீங்கள் புகைப்பிடிப்பதை நிறுத்த வேண்டும்' என்று கூறினார். இதைக் கேட்டு அங்கிருந்த பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன், இங்கிலாந்து தொழிலாளர் கட்சித் தலைவர் கெய்ர் ஸ்டார்மர் உள்ளிட்டோர் சிரித்தனர். மக்ரோன், 'அது முடியாத காரியம்' என்று குறிப்பிட்டார். இதற்கு பதிலளித்த மெலோனி, 'எனக்குத் தெரியும், புகைப்பிடிப்பதை கை விட்டால், ஒருவேளை நான் யாரையாவது கொலை செய்து விடுவேன்' என்று நகைச்சுவையாகக் கூறினார். சில ஆண்டுகளாக புகைப்பழக்கத்தை கைவிட்டிருந்த நிலையில், மீண்டும் மெலோனி புகைக்கத் தொடங்கியதாக அவரே சமீபத்தில் தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். மேலும், துனிசிய அதிபர் கைஸ் சயீத் உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்களுடன் நல்லுறவை வளர்க்க சிகரெட் உதவியதாகவும் அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதே மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் மெலோனியை வெகுவாகப் புகழ்ந்தார். அவர் பேசுகையில், 'ஒரு பெண்ணை 'அழகானவர்' என்று அழைப்பது இப்போது அரசியல் ரீதியாக ஆபத்தானது ஆனால் நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இவர் ஓர் அழகான இளம் பெண்' என்றார். மேலும் மெலோனியை சுட்டிக்காட்டி, 'நீங்கள் அழகானவர் என்று அழைக்கப்படுவதை ஆட்சேபிக்க மாட்டீர்கள், இல்லையா? ஏனெனில் நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்கள். நீங்கள் சிறந்த மற்றும் வெற்றிகரமான அரசியல்வாதி' என்று பாராட்டினார். இந்த மாநாட்டில் பேசிய மெலோனி, இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டால், பாலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க இத்தாலி தயாராக இருப்பதாகவும் சமிக்ஞை கொடுத்தார். (ஐ)

## ஒரு வாரத்தில் முடிக்க வேண்டிய போரை 4 வருடமாக தொடர்கிறார்: ரஷ்ய அதிபர் புதினை விமர்சித்த அமெரிக்க அதிபர் டிரம்ப்!

உக்ரைன் உடனான போரை புதின் ஏன் தொடர்கிறார் என்று தெரியவில்லை. ஒரு வாரத்தில் வெல்லக்கூடிய போர் 4 வருடமாக தொடர்கிறது என ரஷ்ய அதிபர் புதினை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கடுமையாக சாடியுள்ளார். உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கிட்டத்தட்ட 4 ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. இதனால், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், ரஷ்ய அதிபர் புதினை கடுமையாக விமர்சித்து வருகிறார். அந்த வகையில் வெள்ளை மாளிகையில் அளித்த பேட்டியிலும் டிரம்ப் கூறியதாவது

புதினுக்கும் எனக்கும் இடையே நல்ல உறவு இருந்ததால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். அவர் ஏன் இந்தப் போரைத் தொடர்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் போர் அவருக்கு மிகவும் மோசமாக இருந்தது. அவர் 4 வருடங்களாக ஒரு போரில் ஈடுபட்டுள்ளார். அதை ஒரு வாரத்தில் அவர் வென்றிருக்க வேண்டும். இந்தப் போரினால் புதின் சுமார் 15 லட்சம் வீரர்களை இழந்து இருக்கலாம் அல்லது அதற்கு நிகரான எண்ணிக்கையில் இருக்கும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்த மிகப்பெரிய இறப்பாக இருக்கலாம். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு போர் உட்பட எட்டுக்கும் மேற்பட்ட போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தேன் என்றார். (ஐ)



## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நாளைமறுதினம்18 ஆம் திகதி வரை இந்தியாவில் இருப்பார். அப்போது அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பல உயர்மட்டத் தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்துவார்.

நாளை நடைபெறவுள்ள என்.டி.ரி.வி. உலக உச்சி மாநாட்டில் "நிச்சயமற்ற காலங்களில் மாற்றத்தை வழிநடத்துதல்" என்ற தலைப்பில் அவர் முக்கிய உரையை நிகழ்த்தவுள்ளார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் வெள்ளக்கொடி விவகாரம் தொடர்பில் சாட்சியம் வழங்கத் தயார் எனக் கூறி வருகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெற்றால் இனப்படுகொலை நிரூபிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்ற போது அதனைக் குழப்பும் விதமாக அரசுடன் இணைந்து செயற்படும் விதமாக சரத் பொன்சேகாவின் கருத்துக்களும் இருந்து வருகின்றன.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் தொடர்சியாக மக்களை அழிக்கின்ற நடவடிக்கைகளின் போது கடும் ஆட்லறித் தாக்குதல்களை மக்கள் மீது பயன்படுத்தி வந்த சூழலில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்குக் கண்காணிக்கப்பட்ட ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு என்னுடன் தொடர்புகளை மேற்கொண்டார்கள்.

அவ்வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொண்டேன். குறிப்பாக 2009ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் முதல் இரவு 8 மணி வரை இருபக்கத் தொடர்புகளை மேற்கொண்டு இணக்கப்பாடு எற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இரண்டு ஆயர்களான இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் அரசு நேரடியாகத் தொடர்பு கொண்டு அரச தரப்பில் பஸில் ராஜபக்ஷவும் நானும் வன்னி கட்டுப்பாட்டுக்குச் சென்று அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன் வெளியில் வந்து மக்களைப் பாதுகாப்பாக வெளியில் கொண்டு வருவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால், பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்தபோதும் இராணுவம் ஆட்லறித் தாக்குதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்ட நிலையில் எதற்காக இதனைச் செய்கிறீர்கள் என்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லை, அவர் நாடு திரும்பிய பின்னர் தேசிய பாதுகாப்பு கூட்டத்தில் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும், அந்தக் கூட்டத்தில் முடிவுகளை எடுக்கப்படாது தொடர்சியாக மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. இதனை ஏன் தொடர்ந்தும் இதனை செய்கிறீர்கள் எனக் கேட்டபோது தேசிய பாதுகாப்புக் கூட்டம் கூடும் வரை தாக்குதலை நிறுத்த முடியாது எனக் கூறப்பட்டது.

மேலும் வெள்ளைக்கொடியுடன்தான் வர முடியும் எனக் கூறப்பட்டது. இது சாத்தியப்பாடு இல்லாத விடயம் என்பதால் எனது இணக்கப்பாட்டை நான் முடிவுறுத்திக் கொண்டேன்.

காரணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் மூலம் மக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சரி வராத நிலையில்தான் என்னுடனான தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளைக் கொடி விவகாரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காரணம் பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் காணப்பட்ட போதும் தொடர்ச்சியான ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது மக்களை இல்லாது ஒழிப்பதற்கான சூழலைத்தான் அரசு செய்தது என்பதே நான் கூறும் விடயம். இது இனப்படுகொலையின் விவகாரமாகும்.

ஆனால், சரத் பொன்சேகா தற்போது கூறி வரும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் நான் கூற முடியாது. வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களைக் கொலைசெய்தார்கள் என்பது கடந்த காலங்களில் வெளிவந்த உண்மைகள் என்பது அனைவருக்கும் புரிந்த விடயம் ஆகும்.

சரத் பொன்சேகா தற்போது கூறும் விடயம், வெள்ளைக்கொடி தொடர்பாகத் தான் சாட்சி வழங்கத் தயார் என்பதே. உள்ளக விசாரணைக்குள் வெள்ளைக்கொடி விவகாரம் முடக்கப்படுவதற்கான அத்திவாரம் போடுகின்ற கருத்தாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

சரத் பொன்சேகாவும் சர்வதேச குற்றவியல் விசாரணைதான் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்." - என்றார்.

## செவ்வந்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நேபாள அரசின் உதவியுடன் இலங்கைப் பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்து மூன்று நாள்களாக நேபாளத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இஷாரா செவ்வந்தியுடன் ஜே.கே. பாய் உட்பட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவினர் நேற்று புதன்கிழமை மாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எந்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் கடந்த காலங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றபோது, இவற்றை அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும், செவ்வந்தி உள்ளிட்டவர்களைப் பிடிப்பதற்குக் கூட தெம்பு இல்லை எனவும் எதிரணிகள் கூச்சலிட்டன.

ஆனால், எந்தக் கொம்பனாக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்பது இன்று நிரூபணமாகி வருகின்றது.

கடந்த காலங்களில்தான் குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர். ஆனால், எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை. தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்ப முடியாது.

அதேவேளை, மக்களுடைய சொத்துகளைக் களவாடியவர்கள், சூறையடித்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் சிக்குவார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன் மகேந்திரன் விடயத்திலும் சட்டம் செயற்படும்." - என்றார்.

## கேடு கெட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராதாகிருஷ்ணன் ஆகியோரை மக்கள் ஒதுக்கி வைத்துள்ளனர். எனவே, கேடு கெட்ட அரசியலை அவர்கள் நிறுத்தாவிட்டால் முகத்திரைகளை கிழித்தெறிய வேண்டிய நிலை ஏற்படும்." - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"பீரியபெத்த மண்சரிவு ஏற்பட்டு எத்தனை வருடங்கள்? இவ்வளவு நாளும் எங்கிருந்தீர்கள் என ஜீவன், மனோ, திகாரம்பரம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் கேட்கின்றேன். இவ்வளவு நாளும் படுத்து தூங்கிக் கொண்டிருந்தீர்களா? அவர்களுக்கான வீடுகள் தற்போதுதான் கட்டப்பட்டு கையளிக்கப்படக்கூடிய சூழ்நிலை வந்துள்ளது.

வெற்றுக் காகிதம் என்ற விமர்சனமும் முன்வைக்கப்பட்டது. வழங்கப்பட்டது காகிதமாக இருந்தாலும் உண்மை என்னவென்பது மக்களுக்கு தெரியும். எனவே, கேடு கெட்ட அரசியலை நிறுத்துங்கள். எமது மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்காமல், அவர்களை அடிமை வாழ்வு வாழ வைத்ததால்தான் கடந்த தேர்தலில் மக்கள் பதிலடி கொடுத்தார்கள். கொழும்பில் இருந்த மக்களும் மனோவின் நாடக நடிப்பு அரசியலை நிராகரித்து, அவரை ஒதுக்கி வைத்துள்ளனர்.

மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்குரிய ஆதரவு அதிகரித்து வருவதால்தான் இவர்கள் கத்துவதற்கு ஆரம்பித்துள்ளனர். தம்பி ஜீவன் அரசியலை நல்ல முறையில் கற்றுக்கொள்ளுங்கள். கூவித் திரிவதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

கடந்த காலங்களில் நீங்கள் எத்தனை வீடுகளைக் கட்டினீர்கள்? கட்டிய சில வீடுகள்கூட எந்த நிலையில் உள்ளது? எனவே, முடியுமாக இருந்தால் உதவி செய்யுங்கள், தயவு செய்து உபத்திரம் செய்யாதீர்கள் என திகா, மனோ, இராதா, ஜீவனிடம் கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் கதைக்கப்போனால் உங்களின் முகத்திரைகளைக் கிழிக்க நேரிடும்." - என்றார்.

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரம் திறந்துவைப்பு!



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் மணிக்கூட்டுக்கோபுரத்தை திறந்து வைத்துள்ளார்.

இம் மணிக்கூட்டுக் கோபுரம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவன் தணிகாசலம் விஜயகுமாரின் நிதிப்பங்களிப்புடன் அவரது தந்தை கந்தையா தணிகாசலம் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

# சம்பள உயர்வு பற்றி ஆராய நாளை கூடுகின்றது சம்பள நிர்ணய சபை

கொழும்பு, ஒக். 16

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகச் சம்பள நிர்ணய சபை நாளை வெள்ளிக்கிழமை கூடுகின்றது.

தொழில் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டீ.என். கே.வட்டலியத்த தலைமையில், கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் பிற்பகல் 1 மணியளவில் சம்பள நிர்ணய சபை கூடும் எனத் தெரியவருகின்றது.

சம்பள நிர்ணய சபையின் தொழில் அமைச்சின் நியமன உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் இலங்கைத் தொழிலாளர் காங்ரஸின் சட்ட ஆலோசகர் கே.மாரிமுத்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முத்துக்குமார், விவசாய தோட்ட தொழிலாளர் காங்ரஸ் சார்பில் ஆர்.எம்.கிருஷ்ணசாமி, அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கிட்னண் செல்வராஜா, இலங்கை செங்கொடி சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி மற்றும் பி.ஜி.சந்திரசேன உள்ளிட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், தொழில் தருநர் சார்பில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழகத்தில் அகதிகளாக தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் தாயகம் திரும்பினர்!

*இந்தியாவின் தமிழகத்தில் அகதிகளாக தங்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மீண்டும் கடல் வழியாக இலங்கைக்கு திரும்பியுள்ளனர்.*

*மன்னாரைச் சேர்ந்த குறித்த குடும்பத்தினர் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக கடல் வழியாக படகில் சென்று தமிழகத்தில் அடைக்கலம் கோரிய நிலையில் நீண்ட நாட்களாக முகாமில் வசித்து வந்துள்ளதாக தெரியவருகிறது.*

*இந்நிலையில் தற்போது போர் நிறைவடைந்து இலங்கையில் இயல்பு நிலை திரும்புவதாக அறிந்ததையடுத்து நேற்று முன் தினம் (14) இரவு தமிழ்நாட்டில் இருந்து படகில் புறப்பட்டு மன்னார் பேசாலை கடற்பரப்பை வந்தடைந்தவுள்ளனர்.*

*நாட்டுக்கு வருகை தந்தவர்கள் தாமாகவே பேசாலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.*

*இதையடுத்து குறித்த நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk